செய்தி வெளியீடு எண் :41 நாள் :21.03.2021

**தேனி மாவட்டம்**
**தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021**
**தேனி - உழவர் சந்தையில், வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை**
**மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்**
**திரு ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்:-**
*******

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021 நடைபெறவுள்ளதையொட்டி, தேனி மாவட்டத்தில் நூறு சதவிகித வாக்குப்பதிவினை வலியுறுத்தி, வாக்களிப்பதன் அவசியம் குறித்து, வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் இன்று (21.03.2021) தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட உழவர் சந்தையில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள் வாக்காளர் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 நடைபெறவுள்ளதையொட்டி, தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களும், நூறு சதவீத வாக்குப்பதிவினை உறுதி செய்திடும் பொருட்டும், பொதுமக்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்தும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் செயல் விளக்க விழிப்புணர்வு முகாம்கள், அதிநவீன மின்னணு திரை வாகனம் மற்றும் சிறிய அளவிலான மின்னணு திரை வாகனங்களின் மூலம் கிராமப்புற, நகர்ப்புற பகுதிகளில் வாக்காளர்கள் விழிப்புணர்வு படக்காட்சிகள் நடத்துதல், மகளிர் சுய உதவிக்குழுவினரின் விழிப்புணர்வு வண்ண கோலமிடுதல், வாக்காளர்கள் கையெழுத்து இயக்க விழிப்புணர்வு நிகழ்ச்சி, விழிப்புணர்வு (Selfie) பதாகை, இராட்சத வண்ண பலூன் பறக்க விடுதல், கல்லூரி மாணவ, மாணவியர்களை கொண்டு விழிப்புணர்வு பேரணி, பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களில் வாக்காளர் விழிப்புணர்வு ஒட்டு வில்லைகள் (Stickers) பதிக்கும் பணி, இரு சக்கர வாகன வாக்காளர் விழிப்புணர்வு பேரணி, கிராமிய கலை நிகழ்ச்சிகள், சமையல் எரிவாயு உருளைகளில் வாக்காளர் விழிப்புணர்வு வில்லை பதிக்கும் பணி போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, இன்றைய தினம் தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட உழவர் சந்தையில் வாக்காளர் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு, விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதனைத்தொடர்ந்து, மாவட்டத்திலுள்ள 198. ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200. போடிநாயக்கனூர், 201. கம்பம் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள வாக்காளர்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்ககளை வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்களின் நலன் கருதி, தமிழக அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளதன்படி, முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியினை கடைபிடித்தல், கிருமி நாசினியினை கொண்டு கை கழுவுதல், கூட்ட நெரிசல்களை தவிர்த்தல் உள்ளிட்ட அரசால் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை சரிவர கடைபிடித்து, பொதுமக்களாகிய வாக்காளர்கள் அனைவரும் நூறு சதவிகிதம் வாக்களித்து, தங்களின் ஜனநாயக கடமையினை நிறைவேற்றிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வந்நிகழ்வின் போது, உதவி ஆட்சியர் (பயிற்சி) தாக்ரே சுபம்,இ.ஆ.ப., துணை இயக்குநர் (வேளாண் விற்பனைக்குழு) பால்ராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) விஷ்ணுராம் மேத்யூ, வட்டாட்சியர்(தேனி) தேவதாஸ் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**